3. அறிவிப்புகள்

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் திறப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்றப் பெண் உறுப்பினர்களின் வசதிக்காக சென்னை அரசினர் தோட்டம் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு 'சி' பிளாக்கில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சட்டமன்றப் பெண் உறுப்பினர்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சிக் கூடத்தை மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று தங்கள் திருக்கரங்களால் திறந்து வைத்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பெண் உறுப்பினர்கள் இதனைப் பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.*

4. பெண் உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் இறுதிக் காலம்வரை இளமையோடு இருக்கவும், உடல் ஆரோக்கியத்தோடு இருக்கவும், சுறுசுறுப்பாக மக்கள் பணியாற்றுவதற்கும், கேட்காமலேயே எதையும் தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் தமிழ்நாட்டு பெண் பெரியார், எங்களின் தமிழ்நாட்டு பெண் பேரறிஞர், வாழும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழ்நாடு பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நவீன உடற்பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்ததற்காக எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்.*